**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை - 2022**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 49 ஆம் பந்திக்கு இணங்க, ஒரு வகுப்பைச் சேர்ந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது குறிப்பிட்ட சொத்துக்களின் வகுப்பினை ஒரே தடவையில் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக பகுதிகளாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2022 திசெம்பர் 31 திகதியளவில் மொத்தக் கிரயம் ரூபா 130,951,185 தொகைக்கான கட்டிடங்கள் அதே கிரயத்திற்கும் மொத்தக் கிரயம் ரூபா 21,920,729 தொகைக்கான கட்டிடங்கள் அதன் மீள்மதிப்பீட்டுப் பெறுமதிக்கும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் வருகை மீது எதிர் காலத்தில் மீள் மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்திக்கு இணங்க, சொத்தொன்றின் மீதிப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலத்தை கழித்து அனைத்து வருடாந்த அறிக்கையிடும் காலப் பகுதியின் இறுதித் தினத்தில் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 43,265,362 தொகை கிரயத்தையுடைய மோட்டார் வாகனங்கள் (நடைமுறைச் சொத்துக்கள்) முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன்படி, ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கண்ககீட்டு நியமமம் 03 இற்கு இணங்க திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சுட்டிக்காட்டிய இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இற்கு இணங்க குறிப்பிட்ட திருத்தங்கள் விரைவாக மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கண்ககீட்டு நியமம் 07 இன் 42 ஆம் பந்திக்கு முரணாக நன்கொடையினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் தியந்த சிகிட்சை புனர்வாழ்வு மையத்தின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 5,816,589 தொகையாக காணப்பட்டதுடன், நிர்மாண வேலைக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 3,598,600 தொகையாக காணப்பட்ட போதிலும், கட்டிடத்தின் நிர்மாண வேலையின் கிரயத்தை காட்டுவதற்கு பதிலாக மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 4,500,000 தொகை நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நடைமுறை வேலைகளின் தற்போதைய சந்தைப் பெறுமதி கணிக்கப்பட வேண்டியமையால் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வேண்டிக்கொள்ளப்பட்டவாறு ரூபா 4,500,000 தொகை பெறுமதியொன்று கிடைத்திருந்தது. அதன்படி, அந்தப் பெறுமதி இறுதிக் கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | UNODC கட்டிடம் மற்றும் புதிய திகந்த கட்டிட நிர்மாணிப்பதற்காக பண்டங்கள் மற்றும் நிதி நன்கொடை பெறுகைகள் ஆவணப்படுத்தியிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன், 97 பந்தியின் படி தனதாக்கிய திகதியில் காணப்பட்ட நியாயமான பெறுமதியின் மீது வருவாயினை இனங்காணல் மற்றும் 106 பந்திக்கு இணங்க நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஐந்தொகை திகதியளவில் இந்தக் கட்டிடம் முறைசார் விதமாக பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்காமையால் குறிப்பிட்ட பெறுமதியை நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டது. தற்போது முறைப் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையால் குறிப்பிட்ட கணக்குகளை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கண்ககீட்டு நியமம் 19 இன் 59 ஆம் பந்திக்கு இணங்க எதிர் கால ஊழியர் நலன்களை தீர்ப்பதற்காக அந்தப் பொறுப்புக்கள், கழிவு அடிப்படையில் அளவை செய்ய வேண்டியிருந்த போதிலும் சபையினால் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கம் கணிக்கும் போது பணத்தின் நிகழ்கால பெறுமதி / கழிவு முறை கவனத்தில் எடுத்திருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அடுத்த கணக்கு ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் குத்தகை காணிகள் தொடர்பாக கடைபிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கை புதிய திகந்த புனர்வாழ்வு மையத்தின் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் | சபைக்கு சொந்தமான அனைத்து குத்தகை காணிகள் தொடர்பாக கடைபிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்த நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| குத்தகைக் காணி தொடர்பாக மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, குத்தகைக் காணிகள் தொடர்பாக சபை கடைபிடிக்கும் கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பேன். | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 09 உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 6,193,135 இற்கான பணிக்கொடை நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் பணிக்கொடைத் தொகை ஒதுக்கம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் ரூபா 6,193,135 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | செலுத்த வேண்டிய பணிக்கொடைத் தொகை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 தொங்கல் கணக்கு

| விடயம் | தொகை (ரூபா) | தொங்கல் என காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| தொங்கல் கணக்கு | 185,685 | 09 வருடங்கள் | மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுகின்றது என. | தொங்கல் கணக்கின் மீதி கூடிய விரைவில் இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **விடயம்** | **தொகை (ரூபா)** | **சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள்** | | |
| தென்னை வருமானம் | 1,734,826 | வருமான அறிக்கைகள் | தென்னை வருமானத்தை இணக்கம் செய்யக்கூடியவாறு இணக்கப் பதிவேடொன்று எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். | வருமானக் கூற்றுக்கள் நாளதுவரையாக கணக்குப் பிரிவில் பேணிச் செல்ல வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
### 1.6.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முற்பணக் கணக்கில் காணப்பட்ட ரூபா 1,087,009 இற்கான வரவு மீதி 20 வருடங்களை விட மிகையான காலம் முதல் அசைவின்றி காணப்படுவதுடன், அந்த மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக போதியளவு தகவல்கள் காணப்படவில்லை. | இந்த மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக போதியளவு சான்றுகள் சபையில் காணப்படாததுடன், பதவியணியினரை ஈடுபடுத்தி குறிப்பிட்ட பதிவேட்டை மென்மையாக பரசோதனை செய்யப்பட்டு வருகின்றது. | முற்பண மீதியின் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2008 இன் 1 ஆம் இலக்க போதைப்பொருள் மற்றும் உளநிலை மாற்று மருந்துகளை சட்டவிரோதமாக கடத்தலுக்கு எதிரான உடன்படிக்கை சட்டத்தின் பிரிவு 18 உடன் பிரிவு 31 மற்றும் அரசியல் யாப்பின் 44 பிரிவின் (2) ஆவது பந்தியின் படி ஆக்கப்பட்ட கட்டளை இலக்கம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1653/7 – 2010 மே 10 திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் | | | |
| i. | கட்டளை 05 பந்தி | அதிகார சபையின் கருமங்கள் மற்றும் செய்பணிகளை செயற்படுத்துதல், நிறைவேற்றுதல் மற்றும் மேற்கொள்வதற்காக தேவைப்படும் செயலாளர் ஒருவர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அதிகார சபையினால் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 ஆண்டு இறுதி வரை தேவைப்படும் பதவியணியினரை ஆட்சேர்த்தல் மேற்கொண்டிருக்காததுடன் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தனர். | பிரதமர் செயலகத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த கடிதத்தின் படி வெற்றிடங்களை நிறப்புவதற்காக வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளின் படி 2023 மே 23 திகதிய NDDCB/HR/01/02-1 தொடர்பு இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் தேவையான விடயங்களை மீண்டும் வரிசை அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| ii. | கட்டளை 08 பந்தி மற்றும் கட்டளை 10 பந்தி | 2008 இன் 1 இலக்க போதை மருந்துகள் மற்றும் உளநிலை மாற்று மருந்துகள் சட்ட விரோதமாக கடத்தல் செய்வதற்கு எதிராக உடன்படிக்கைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகார சபை கூட்டங்களின் அலுவல்கள் மேற்கொள்ளல் தொடர்பாக கடைபிடிக்க வேண்டியதுடன், கட்டளை 10 பந்திக்கு இணங்க அதன் கருமங்கள் தொடர்பாக முன்னோடி அதிகார சபையின் மற்றும் சபையின் அங்கத்தவர்களினால் மீளாய்வு மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | தொடர் நடவடிக்கைகள் கணக்காய்வு அவதானிப்புக்களில் சுட்டிக்காட்டியுள்ளவாறு செயற்படுத்துவதற்கு அறிவுரைகள் மற்றும் அங்கீகாரம் 2023 மே 23 திகதி சிரேஷ்ட பதவியணியினர் கூட்டத்தில் வழங்கப்பட்டிருந்தது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| iii. | கட்டளை 13 பந்தி | அதிகார சபையின் அங்கத்தவர்களினால் குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் அனுமதிப்பத்திரதாரர் பதிவு செய்யப்பட்ட வளாகத்திற்கு வருகை தந்து அட்டவணையின் பண்டங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்ற செயற்பாடுகள் தொடர்பாக மேற்பார்வை மற்றும் பண்டங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள முறை அனுமதிப்பத்திரதாரர் பேணிச் செல்லும் புத்தகங்கள், ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பரிசோதனை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 ஆண்டில் 636 வளாகங்களில் 24 மாத்திரம் பரிசோதனை செய்யபட்டிருந்தது. மேலும், வளாகத்திற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக பதிவு செய்யப்பட்டிருந்த 18 நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு இடப் பரிசோதனைக்கு செல்வதற்கு முடியாமையால் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முடியாமல் இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களின் படி குறிப்பிட்ட அலுவல்களை முறைப்படுத்தல் மேற்கொள்வதற்காக உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும். | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையாகியுள்ள நபர்களுக்கு (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) சட்டத்திற்கு இடை நேராக வெளியிடப்பட்ட 2010 மே 10 திகதிய 1653/19-2010 இலக்கம் கொண்ட வர்த்தமானி | 2022 ஆண்டளவில் 26 தனியார் சிகிச்சை நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்ததுடன், நிலையங்களின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக காணப்படும் குறைந்த நியமங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆண்டின் போது நிலையங்கள் எவற்றினதும் | 2023 ஆண்டு ஏப்ரல் மாதமளவில் தனியார் சிகிச்சை நிலையங்கள் மீண்டும் விசாரணை மேற்கொண்டு குறைந்த நியமத்தினை அபிவிருத்தி செய்திருந்த 08 சிகிச்சை நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த து. ஜூன் மாதத்தில் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்காக | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆக்கப்பட்ட கட்டளைகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிச்சயிக்கப்பட்டுள்ள ஏனைய தனியார் சிகிச்சை நிலையங்களின் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு தேவையான அலுவல்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | தாபனக் கோவையின் பந்தி 15.1 மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 03/2016 | திருத்தப்பட்ட சேவை யாப்பின் படி ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடை சித்தியடைய வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தினால் 2019 மே 26 திகதி வினைதிறன் காண் தடை பரீட்சை நடாத்தியிருந்ததுடன், அதன் பின்னர் பரீட்சை நடாத்தியிருக்கவில்லை. 03 வருடங்களுக்குள் வினைதிறமை காண் தடைப் பரீட்சை பூர்த்தி செய்யாத 137 உத்தியோகத்தர்கள் நிறுவனத்தில் சேவையாற்றுவதுடன், இந்த உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த சம்பள அதிகரிப்பும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | எதிர் காலத்தில் கணக்காய்வு அவதானிப்பு மூலம் சுட்டிக்காட்டியுள்ள விதத்தில் செயற்படுவேன். | தாபனக் கோவைக்கு மற்றும் உரிய சுற்றறிக்கைகளுக்கு இணங்கி செயற்பட வேண்டும். |
| **(ஈ)** | **1983 இன் 12 ஆம் இலக்கம் கொண்ட பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் 11 ஆம் பகுதியில்** | | | |
| i. | உப பிரிவு 5(1) | சபையின் சேவையை முடிவுறுத்திய உத்தியோகத்தர்களுக்கு சேவையை முடிவுறுத்திய நாள் முதல் 30 நாட்களுக்குள் பணிக்கொடையை செலுத்தி முடிக்க வேண்டியிருந்த போதிலும் 2022 ஆண்டின் போது 09 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,010,131 தொகை | சபைக்கு போதியளவு கட்டுநிதிகள் கிடைக்காமையால் இவ்வாறான தாமதங்கள் ஏற்படுகின்றன என கருணையுடன் அறிவிக்கின்றேன். | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கான தாமதக் காலம் 01 மாதம் முதல் 15 மாதம் வரையான வீச்சில் பரவியிருந்தது. 5 உத்தியோகத்தர்களுக்கு அட்டுருவாக்கியிருந்த பணிக்கொடையின் பெறுமதி ரூபா 4,281,615 தொகைக்காக 2023 ஆண்டில் கொடுப்பனவு மேற்கொண்டிருந்த தாமதக் காலம் 01 மாதம் முதல் 03 மாதங்கள் வரையான கால வீச்சில் பரவியிருந்தமையால் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| ii. | உப பிரிவு 5(2)(1) | தொழில் வழங்குனருக்கு விதிக்கப்பட்ட ஈடுபாட்டுப் பொறுப்பு நிறைவேற்றுவதற்கு முன்னர் அந்த சேவை வழங்குனரின் மரணம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அவரின் சட்டரீதியான முகவரினால் அந்த ஈடுபாட்டுப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், இறந்த ஊழியர்கள் இரண்டு பேர் தொடர்பாக அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இறந்த ஊழியர்கள் இருவரின் பணிக்கொடை உரிமை தொடர்பாக இதுவரை விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் வேண்டுகோள் சமர்ப்பிக்கப்படாமையால் இதுவரை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| **(உ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| | நிதிப் பிரமாணம் 880 | நிறுவனத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை சபையினால் இனங் கண்டிருக்காததுடன், (அதிகாரம ˙612) அரச உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் படி பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 880 இற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங் கண்டு பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 48,359,337 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 15,018,049 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 63,377,386 இற்கான பின்னடைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு போதை ஔடதங்களுக்கு அடிமையாகிய ஆட்களுக்கு சிகிச்சையில் புனர்வாழ்வுக்கான செலவு ரூபா 21,198,901 இனால் அதிகரித்தல் மற்றும் பலவின வருமானங்கள் குறைவடைதல் முக்கியமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| போதைப் பொருட்களை பயன்படுத்தும் ஆட்களை மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்காக தேவையான ஆலோசனை சேவைகள் வழங்கள், தேவையான ஆரம்ப மட்டத்தில் தலையீடுகள் மேற்கொள்ளல், தேவையான சிகிச்சை சேவைகள் (சிகிச்சை நிலையங்கள் / உளவியல் சிகிச்சை நிலையங்கள் மற்றும் ஏனைய தேவையான சேவைகள்) என்பவற்றிற்கு அனுப்புதல் மற்றும் தகவல்கள் வழங்கும் குறிக்கோளுடன் 2020 மார்ச் மாதம் தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபை தலைமை அலுவலக வளாகத்தின் 1927 தொலைபேசி ஆலோசனை சேவை அலகு ஆரம்பிக்கப்பட்டது. சேவை வழங்குவதற்காக காணப்படும் உத்தியோகத்தர்கள் வரையறுக்கப்பட்டு காணப்பட்டமையால் இந்த தொலைபேசி ஆலோசனை அலகின் முன்னேற்றம் 2021 ஆண்டை விட 2022 ஆண்டின் போது 38 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த காரணத்தினால் எதிர்பார்த்த குறிக்கோள் ஆக்கபூர்வமாக நிறைவேற்றப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | சேவை வழங்கவுள்ள உத்தியோகத்தர் எண்ணிக்கை வரையறையாக இருப்பதன் காரணமாக குறிப்பிட்ட காலப் பகுதியில் அழைப்புகளின் எண்ணிக்கையில் குறைவொன்று ஏற்பட்டிருந்தது. தற்போது காணப்படும் பதவியணி பற்றாக்குறையை கவனத்தில் எடுத்து பல்கலைக்கழகத்தின் இளங்கலை மாணவர்கள் உள்ளுரைவாளர் பயிற்சியின் கீழ் அல்லது தன்னிச்சை அடிப்படையில் குழுவொன்றினை தொடர்புபடுத்தி தேவையான தொழில்நுட்ப பயிற்சியின் கீழ் சேவை வழங்குவதற்கு ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | தொலைபேசி இலக்கம் 1927 உதவிச் சேவை உரிய முறையில் செயற்படுத்துவதற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ திறைமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய ''நவ திகந்த'' சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபா 5,000,000 நன்கொடைத் தொகையொன்று 2021 ஆண்டின் போது கிடைத்திருந்தது. கட்டிடத்தின் நிர்மாண வேலைக்காக ரூபா 8,948,612 இற்கான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், நிர்மாண வேலைகள் இலங்கை கடற்படையின் உழைப்பு பங்களிப்புடன் மேற்கொள்வதற்காக ரூபா 3,132,014 தொகை கழித்து ரூபா 5,816,589 இற்கான கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலைக்கு தேவையான பண்டங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,598,600 தொகை செலவிடப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 2022 மார்ச் 25 திகதி பௌதீக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை குழுவின் அறிக்கையின் படி கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களில் ரூபா 1,310,475 தொகை பெறுமதியான பண்டங்கள் வேலைத்தளத்தில் மீதியாக காணப்பட்டது. அதன்படி, நன்கொடையாக கிடைக்கப்பட்டிருந்த பணத்தினை சிக்கனமாக மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், இந்தக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தமையால் பண்ட உதவியாக கிடைத்திருந்த 100 சீமெந்துப் பைகள் UNODC உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடம் ஒன்றுக்கு வழங்குவதற்கு சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | வேலைத்தளத்தில் அலுவல்கள் மேற்கொள்ளும் போது ஏதேனும், சேமிப்புக்கள் மற்றும் பற்றாக்குறைகள் எதிர்பார்க்க முடியும். எனினும், இதனை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக இவ்வாறான உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் UNODC கட்டிடத்திற்காக வழங்குவதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | நன்கொடையாக கிடைத்த பணம் சிக்கனமாக மற்றும் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2007 இன் 54 இலக்க ஔடதங்களுக்கு அடிமையாகியுள்ள ஆட்கள் (சிகிச்சை புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தினை திருத்துவதற்காக 2022 ஜனவரி 24 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அமைச்சரவை பத்திரம் அமப/21/2279/303/176 இற்கு இணங்க சட்டத்திற்கு தேவையான திருத்த | சட்ட வரைஞரினால் இறுதி திருத்த வரைவு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஆங்கில மொழி பெயர்ப்புடன் 2023 மே 02 திகதி நீதி அமைச்சு மற்றும் சட்ட வரைஞர் | சட்டத்திற்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளல் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவல்கள் பூர்த்தி செய்வதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது. | திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2007 இன் 57 இலக்க ஔடதங்களுக்கு அடிமையாகியுள்ள ஆட்களுக்கு (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தின் பிரிவு 07 இற்கு இணங்க சட்டத்துறையில் விஷேடத்துவமுள்ள ஆட்களிடையே அல்லது அபாயகர ஔதடங்களுக்கு அடிமையாகிய மற்றும் தொடர்புடைய உடல் ரீதியான மற்றும் சமூக சிக்கல் ஆகியவை தொடர்பான அனுபவம் மற்றும் அறிவுடைய நபர்களிடையே 10 பேருக்கு மேற்படாத நபர்கள் எண்ணிக்கை அடங்கிய கண்காணிப்புச் சபையொன்று நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கண்காணிப்பு சபை நியமனம் செய்தல் மற்றும் செயற்படுத்துதல் நடைமுறைச் சாத்தியமாக சிக்கல் தன்மையுடன் காணப்படுவதனால் திருத்திய சட்ட வரைவு தயாரிக்கும் போது கண்காணிப்புச் சபைக்குப் பதிலாக மதிப்பீட்டுச் சபையொன்று நியமனம் செய்ய வேண்டிய முறை தொடர்பாக உட்படுத்தப்பட்டுள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2007 இன் 54 இலக்க ஔடதங்களுக்கு அடிமையாகியுள்ள நபர்களுக்கு (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தின் பிரிவு 4 (02) மற்றும் (03) இற்கு இணங்க அதிகாரம் அழிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு நியாயமான நேரங்களில் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள அல்லது பரிந்துரைக்கப்பட்ட ஏதேனும் சிகிச்சை நிலையமொன்றிற்கு உட்படுத்தப்பட்டு தேவையெனக் கணிக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ள முடியுமாக இருந்த போதிலும் 26 நிறுவனங்களின் 2022 ஆண்டின் போது 16 நிலையங்கள் மாத்திரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட கால அறிக்கையின் மூலம் சிகிச்சை நிலையத்தின் வெற்றிகரத் தன்மை தொடர்பான தகவல்கள் சபையின் கவனத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக 2023 மே 22 திகதிய சிரேஷ்ட பதவியணியினருக்காக நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் தடுப்பு, கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் மற்றும் வெளிச் சேவைப் பிரிவின் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு நிலையத்தின் அவதானிப்பு அலுவல்கள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டதுடன் எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான தீர்மானங்கள் எடுக்கும் வரை இந்த மாற்று முறையை பயன்படுத்தி தனியார் சிகிச்சை புனர்வாழ்வு நிலையங்களை மேற்பார்வை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஏப்ரல் 30 திகதி ரூபா 4,085,018 இற்கான குத்தகை பெறுமதிக்கு முப்பது வருட | அரச ஏற்பாடுகள் அல்லது பொதுமக்கள் உதவிநிதி கிடைத்தவுடன் தற்காலிகமாக | காணியை ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கு |

| | | |
|---|---|---|
| குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த ஹோமாகம பிடிபன காணி 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கருமம் உறுதியாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்படாமையால் இந்தக் காணி ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | அல்லது கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வெளிச்சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலோசகர்கள் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சபையினால் குத்தகை காணி உறுதி பெற்றுக்கொள்வதற்கு தேவையான வேண்டுகோள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மேலும் இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1984 இன் 11 இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சட்டத்தின் அதிகாரங்களை செயற்படுத்துவதற்காக 374 பேர்களை கொண்ட பதவியணியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணி 225 ஆக காணப்பட்டமையால் அத்திகதியில் உள்ளவாறு வெற்றிடங்களின் எண்ணிக்கை 149 ஆக இருந்தது. இதன் காரணமாக சபையின் குறிக்கோள்கள், அதிகாரங்கள் மற்றும் கருமங்களை செயற்படுத்தும் போது எதிர்பார்க்கக்கூடிய செயலாற்றல் ஒன்றினை நெருங்குவதற்கு முடியாமல் இருந்தது. | தற்போது அமைச்சரவை தீர்மானத்தின் படி மற்றும் நிதி அமைச்சின் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 03/2022 நடைமுறையில் உள்ளதால் இந்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் உள்ளது. சபையின் அத்தியவசியமான பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2023 மே 23 திகதிய தொடர்பு இலக்கம் NDDCB/HR/0/02/-01 கொண்ட கடிதத்தின் மூலம் ஊழியர் தேவைப்பாட்டினை கணித்து வரிசை அமைச்சுக்கு கடிதம் அனுப்பபட்டது. | முறையான ஆய்வொன்றின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பொருத்தமான விதத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 ஆண்டிற்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் காணப்படும் 07 பிரிவுகளில் 03 பிரிவுகளில் மாத்திரம் பௌதீக முன்னேற்றம் கணக்காய்விற்காக | விரைவாக இந்த அறிக்கை கணக்காய்வுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆய்வுப் பிரிவின் உத்தேச 06 நிகழ்ச்சித் திட்டங்களில் 03 நிகழ்ச்சித் திட்டங்களில் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்திற்கு நெருங்கிக் காணப்பட்டது. | | |
| (ஆ) | சட்ட விரோதமாக போதைப் பொருள் உற்பத்திகளை போக்குவரத்து, கடத்தல், விற்பனை செய்தல் மற்றும் பாவனைக்கு எதிராக சட்டத்தை ஆக்கபூர்வமான வலுப்படுத்துவதற்காக தேசிய போதைப்பொருள் ஆய்வுகூடத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பௌதீக முன்னேற்றம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தரவுகளின் படி, 2022 ஆண்டு எதுவித முன்னேற்றமும் பெற்றிருக்காத உத்தேச 08 நிகழ்ச்சித் திட்டங்களும் 10 சதவீதத்தை விட பௌதீக முன்னேற்றம் பெற்றிருக்காத உத்தேச 03 நிகழ்ச்சித் திட்டங்களும் காணப்பட்டது. | நிறுவனத்தினால் முறையான ஆவனங்கள் பேணப்பட்டு வராமையால் முன்னேற்றத்தை வழங்குவதற்கு முடியாமை, நிறுவனத்தின் ஒருங்கிணைப்பை மேற்கொள்ள முடியாமை, போதைப்பொருள் ஆய்வு கூடத்தில் போதியளவு அறிவியல் அதிகாரிகள் காணப்படாமை. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |